# வள்ளலார் வழிதடத்தில்

### 1. சன்மார்க்கம் இன்றே சரண்

ஊர்ஒன்றுப் போய்ச்சேர உள்ள வழிகளிலே
நேர்சென்று நாடுவது ஒன்றேதான் - பார்எனவே
நன்மார்க்கம் ஒன்றில்போய் நேரத்தே சேரவேண்டின்
சன்மார்க்கம் இன்றே சரண்.

### 2. பசி தவிர்த்தல்

**கண்கண்ட கடவுள்!**

பசிஎன்னும் அரக்கன் தன்னைப்
　　பாரினில் ஒழித்துக் கட்ட
நசியென அவனைப் போக்கி
　　நாவிற்கு உணவு தந்து
புசியெனச் சொல்லும் ஞானப்
　　புனிதமனம் உள்ளோர் எல்லாம்
கசிவந்தக் கருணை யாலே
　　கண்கண்ட கடவுள் அன்றோ!

### 3. சமாதி வலியுறுத்தல்

அற்றம் உற்றாரை அழுது ஆர்ப்பரித்து
முற்றத்தே வைத்து மும்முறமாய் நீராட்டி
சுற்றம் சூழச் சுடுகாட்டில் சுட்டெரித்துக்
குற்றம் புரியும் கொடுந்தொழிலைச் செய்யற்க!

**(அற்றம் : மரணம்)**